**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

<table>
<tr><td colspan="4">2024–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம்12–ம் நாள் திங்கள்கிழமை பிரதிவாதி தரப்பு 1–ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்படுகிறது.</td></tr>
<tr><td>பெயர்:</td><td>சக்திவேல்</td><td>தொழில்:</td><td></td></tr>
<tr><td>த.பெ:</td><td></td><td>சமயம்:</td><td></td></tr>
<tr><td>கிராமம்:</td><td></td><td>சாதி:</td><td></td></tr>
<tr><td>வட்டம்:</td><td></td><td>வயது:</td><td></td></tr>
</table>

**12.8.2024 OS.No. 15/2022 பி.வா.சா. 1 சக்திவேல் ஆஜர்**
**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:</u>**

1) வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். எந்த சர்வே எண்ணிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அதிகரை கிராமம் சர்வே எண். 37/28A மற்றும் 37/28B ஆகும். 37/28A யார் பெருக்கு உட்பிரிவாகியுள்ளது என்றால் என்னுடைய பெயரில் உள்ளது. 2007–ம் வருடம் நான் கிரையம் வாங்கியதன் பேரில் உட்பிரிவாகியுள்ளதா என்றால நான் கிரையம் வாங்கும்பொழுது சர்வே எண். 37/28A மற்றும் 37/28B ஆக இருந்தது. சர்வே எண். 37/28A யாருடைய பெயரில் இருந்து கிரையம் வாங்கினேன் என்றால் பால்சாமி மகன் ராஜாமணி என்பவரிடம் 74 செண்டும், மற்றொரு சர்வே எண் 37/28B எண்ணில் செல்லையா மகன்கள் அங்கு, ராஜாங்கம் ஆகியோரிடம் 36 செண்டு வாங்கினேன்.

2) ராஜாமணி என்பவர் மேற்படி சொத்தை யாரிடமிருந்து கிரையம் வாங்கினேன் என்றால் சக்குடி கிராமம் பொன்னுத்தேவர் வகையறா முத்துப்பிள்ளை என்பவரிடமிருந்து 1981–ல் கிரையம் வாங்கியுள்ளார். ராஜாமணியும், பொன்னுத்தேவரும் மேற்படி சொத்து குறித் து1979–ம் வருடம் கிரைய ஒப்பந்தம் செய்து கொண்ட பின்பு பொன்னுத்தேவர் இறந்தபின்பு அவரது வாரிசுகளிடமிருந்து ராஜாமணி மேற்படி சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

3) பொன்னுத்தேவருக்கு மேற்படி சொத்து கிரையப்பாத்தியமா அல்லது பூர்விக பாத்தியமான என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்திலும், எனது கிரைய ஆவணத்திலும் மேற்படி சொத்து பொன்னுத்தேவருக்கு பூர்விகபாத்தியமாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொன்னுத்தேவருக்கு மேற்படி சொத்து பூர்விகமாக பாகத்தின் அடிப்படையில் அவருக்கு கிடைத்ததா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

4) பொன்னுத்தேவருக்கு மேற்படி சொத்தில் மொத்த பாத்தியம் 1 ஏக்கர் 92 செண்ட் என்றால் சரிதான். 1 ஏக்கர் 92 செண்ட்டில் 74 செண்ட் எனது தகப்பனாருக்கு கிரையம் செய்தது போக மீதி சொத்தை பொன்னுத்தேவர் விற்றாரா என்றால் அவர் அதை விற்று நான்கு,5 கை மாறிபோய்விட்டது. பொன்னுத்தேவர் யார் யாருக்கு அந்த மீதி உள்ள சொத்தை பொறுத்து கிரையம் எழுதிக்கொடுத்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5) மேற்படி மொத்த சொத்தான 1 ஏக்கர் 92 செண்டிற்கு வடபுறம் என்ன உள்ளது என்றால் எனக்கு தெரியாது. 1 ஏக்கர் 92 செண்டிற்கு கீழ்புறம் உள்ள சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் அம்மாதாயி, சின்னப்பொன்னு, கண்ணாதாள், பாண்டியம்மாள், நவமணி ஆகியோருக்கு பாத்தியப்பட்டது. மேற்படி அம்மாதாயி வகையறா மேற்படி 36 செண்ட் சொத்தை யாருக்கு கிரையம் கொடுத்தார்கள் என்றால் செல்லையா சேர்வை மக்கள் அங்குசாமி,ராஜாங்கத்திற்கு கிரையம் கொடுத்துள்ளார்.

6) அங்குசாமி,ராஜாங்கம் ஆகியோர்கள் எனக்கு என்ன உறவு முறை என்றால் பங்காளிகள் உறவு முறை ஆகும். மேற்படி இரண்டு கிரையபத்திரத்திலும் பொன்னையா சேர்வை மகன் பாண்டியராஜ் சாட்சி கையெழுத்து செய்தாரா என்றால் சரிதான். மேற்படி பாண்டியராஜின் பெயரில் மேற்படி சொத்தின் பட்டா அவர் பெயரில் மாறியுள்ளதால் அவர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார். பாண்டியராஜின் பெயரில் 2007–ல் பட்டா ஏற்பட்ட விபரம் தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன்.

7) 2007–ல் பாண்டியராஜன் பெயரில் பட்டா ஏற்பட்டதை தெரிந்துகொண்டு அவரிடம் கிரையம் வாங்காமல் ஏன் என் அப்பா பொன்னுத்தேவரிடம் கிரையம் வாங்கினார் என்றால் அப்போது பட்டாவிற்கு மதிப்பில்லை என்பதால் என் அப்பா பொன்னுத் தேவர் வகையறாவிடம் கிரையம் வாங்கியுள்ளார். 2007–லிலேயே நான் என்அப்பாவிடமிருந்து நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற தேதியிலும் பாண்டியராஜன் பெயரில் பட்டா இருந்தது என்றால் சரிதான். மேற்படி பட்டாவிற்காகதான் பட்டாவை மாற்றிக்கொள்வதற்காக கையெழுத்து போட்டார்.

8) பட்டாவை ரத்து செய்வதற்காக பத்திரத்தில் பாண்டியராஜன் எனக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் எழுதிகொடுத்துள்ளார். 2007–ம் வருடத்திலிருந்து மேற்படி சொத்திற்கு நான் தீர்வை ரசீது போட்டேனா என்றால் போடவில்லை. உழவடை ரசீது போட்டுள்ளேன். உழவடை ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் செய்துள்ளேன். உழவடை ரசீது தாக்கல் செய்துள்ளதையும், வரிரசீது தாக்கல்

செய்யவில்லை என்பதையும் நான் நிரூபணவாக்குமூலத்திலும், பிராதிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மோசடி பட்டாவை ரத்து செய்ய சிவகங்கை வருவாய் கோட்டாட்சியரிடத்தில் நான் தாக்கல் செய்துள்ள மனுவை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன்.

9) 2008–ல் பொன்னையா சேர்வை மகன் பாண்டியராஜனிடம் வாதி அர்ஜீனன் தாவா சொத்தான 1 ஏக்கர் 60 செண்டை சர்வே எண்.37 28 B–ன் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். ஆனால் அது மோசடி கிரையமாகும். மேற்படி கியைத்தை நான் எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் 2012–ம் வருடம் தெரிந்துகொண்டேன். தெரிந்துகொண்டபிறகு பட்டாவை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்தேனா என்றால் நான் வாய்மொழியாக அவரிடம் கேட்டேன். எழுத்துமூலமாக கேட்கவில்லை.

10) நான் வாய்மொழியாக கேட்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சொத்தில் வாதி அர்ஜீனன் கருப்பையா மகன் கலைமணிக்கு 30 செண்டை விற்ற விபரம் 2012–ல் தெரியும் என்றால் சரிதான். கலைமணிக்கு கிரையம் செய்தது பற்றி நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். 2012–ம் வருடமே நான் மேற்படி விபரங்களை தெரிந்துகொண்டு மேற்படி கிரைய பத்திரங்களை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்காமல் தற்போது நான் கேட்கும் பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

11) நான் தாக்கல் செய்துள்ள எதிர்கோருரிமை எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. மேற்படி சொத்துக்களை நான் அனுபவம் செய்யவில்லை என்பதால் எனக்கு உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி சொத்துக்களில் தென்னைமரங்களை வைத்து தற்போது வரை விவசாயம் செய்து வருகிறேன். தாவா சொத்து பொன்னுசேர்வைக்கு பாத்தியம் இல்லை என்பதால் அதன் வழியாக எனக்கு ஏற்பட்ட கிரையமும் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**(மறு விசாரணை இல்லை)**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate, Thiruppuvanam.